இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 01.08.2026



# பெரியார் படத்துக்கு மாலை - பெரியார் திடலுக்கு போலீஸ்!

தனது கொள்கைத் தலைவராக தந்தை பெரியாரை அறிவித்துள்ள முதலமைச்சர் விஜய், பெரியார் திடலுக்கு முன்னால் போலீஸைக் குவித்துள்ளார். அவரால் அறிவிக்கப்பட்ட கொள்கைத் தலைவரான பெரியாரைப் பற்றி அவருக்கே தெரியாது என்பது இதன் மூலம் தெரிகிறது.

**‘நீட்’ தேர்வை ரத்து செய்யுங்கள் என்று பரப்புரைப் பயணம் தொடங்குகிறது திராவிடர் கழகம். இது ஒன்றிய பா.ஜ.க.வை நோக்கி வைக்கும் கோரிக்கை ஆகும். அதைப் பார்த்து விஜய் ஏன் பதற்றம் அடைகிறார்? அதுகுறித்து பரப்புரை தொடங்கினால் இவருக்கு என்ன?**

**பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வழங்கப்படும் இடஒதுக்கீட்டை முழுமையாக ரத்து செய்யச் சொல்கிறது திராவிடர் கழகம். இதுவும் ஒன்றிய பா.ஜ.க.வை நோக்கி வைக்கும் கோரிக்கை ஆகும். இதைப் பார்த்து ஏன் விஜய் பதற்றம் அடைகிறார்? அதுகுறித்து பரப்புரை தொடங்கினால் இவருக்கு என்ன?**

இந்த இரு கோரிக்கைகளையும் வலியுறுத்தி இருசக்கர வாகன பரப்புரைப் பயணம் தொடங்குவதற்குத் தடை விதித்துள்ளது த.வெ.க. அரசு. இந்த பரப்புரைப் பயணம் எந்தெந்த ஊர்களுக்குச் செல்லப் போகிறது என்று காவல் துறை தலைமையிடம் முதலிலேயே பட்டியலைக் கொடுத்துள்ளார்கள். அந்தந்த ஊர் காவல் நிலையங்களில் அனுமதியை வாங்கிக் கொள்ளுமாறு திராவிடர் கழக நிர்வாகிகளிடம் டி.ஜி.பி. சொல்லி இருக்கிறார். இந்த நிலையில் பரப்புரைப் பயணம் தொடங்க இருந்தது. அதனைத் தடை செய்து, பெரியார் திடலையே முடக்கும் வகையில் மொத்தமாக போலீஸைக் குவித்துள்ளது த.வெ.க. அரசு.

பிரச்சாரம் செய்யும் அனுமதியைக்கூட மறுத்துள்ளார், ‘ஜனநாயகன்’ படத்தில் நடித்து நாடாள வந்திருக்கும் விஜய்.

**‘நீட்’ தேர்வுக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்கிய கொடுங்கோலர்தான் விஜய். டெல்லியில் போலீஸ் எத்தகைய அராஜகத்தில் இறங்கியதோ அதைத்தான் விஜய் போலீஸும் தமிழ்நாட்டில் செய்தது. சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் போராடிய மாணவர்களை குண்டுக்கட்டாகப் பிடித்து தரதரவென இழுத்துச் சென்றது போலீஸ். மாணவிகள் என்றுகூடப் பார்க்காமல் இழுத்ததால் அவர்கள் ஆடைகள் கிழிந்தன. வலுக்கட்டாயமாக பேருந்தில் ஏற்றினார்கள். பல மாணவிகளுக்கு உடலில் காயம் ஏற்பட்டது. சிலருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.**

**சென்னை திருவொற்றியூரில் உள்ள அரசுக் கல்லூரி மாணவர்களை, சமூக விரோதிகள்போல் அடித்து, தரதரவென இழுத்துச் சென்று காவல்துறை கைது செய்தது. மதுரையில் தடியடி நடத்திக் கலைத்தார்கள். கல்லூரி விடுதிக்குச் சென்று கைது செய்தார்கள். வகுப்பறைக்குள் சீருடையுடன் சென்று கைது செய்துள்ளார்கள். ஒரு மாணவரை அசிங்கமான வார்த்தையால் திட்டுகிறார் திருவொற்றியூர் போலீஸ் அதிகாரி. மாணவியின் கையைப் பிடித்து, இழுத்து அராஜகம் செய்கிறார் ஆண் போலீஸ் அதிகாரி.**

தமிழ்நாட்டில் உள்ள கல்லூரி வாசல்கள் அனைத்திலும் காவல் துறை குவிக்கப்பட்டுள்ளது. சென்னை மெரினா கடற்கரை போலீஸ் கட்டுப்பாட்டில் உள்ளது. சாதாரணமாக கூட்டம் கூடும் உரிமை, போராடும் உரிமை, முழக்கம் எழுப்பும் உரிமை ஆகியவற்றைக்கூட தடை செய்துவிட்டார்கள். அனுமதி பெற்றுப் போராடும் உரிமையைத் தடை செய்துவிட்டார்கள். டெல்லியில் போலீஸ் சீருடை இல்லாதவர்கள் கையில் லத்தியுடன் வந்து மாணவர்களை அடிக்கிறார்கள். இங்கும் அது தொடங்கி இருக்கிறது. சீருடையில் பெயர் பேட்ஜ் எடுத்துவிட்டு வருகிறது போலீஸ். இதுதான் இந்த நாட்டில் நடந்துள்ள மாற்றம் ஆகும்.

**இப்போது ‘நீட் தேர்வை ரத்து செய்’ என்று பரப்புரைப் பயணத்தையே தடை செய்துள்ளார்கள். அடுத்து, ‘நீட் தேர்வை ரத்து செய்’ என்று அறிக்கை விடுவதைக் கூட தவறு என்பார்கள். ஊடகங்கள் இதுபோன்ற செய்திகளை வெளியிடக் கூடாது என்றே கட்டுப்பாடு விதிக்கப்படலாம். மொத்தத்தில் அராஜகம், அராஜகம், அராஜகம் என்பதையே இலக்கணமாகக் கொண்டதாக த.வெ.க. ஆட்சி மாறிவிட்டது என்பதை இரண்டே மாதங்களில் உணர்ந்து விட்டது தமிழ்நாடு.**

பெரியார் திடல் என்பது தமிழ்நாட்டின் அடையாளங்களில் ஒன்று. தமிழ்மக்களின் காவல் அரண் அது. அங்கே போலீஸைக் குவிப்பதன் மூலமாக மாபெரும் களங்கத்தை எடுத்து தன் கோட்டில் பூசிக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

பெரியார் திடலை ‘சமூகநீதியின் தலைமையகம்’ என்றார் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள். ‘நான் மண்டல் அறிக்கையை எழுதி விட்டேன், நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்’ என்று சொன்னவர் பி.பி. மண்டல் அவர்கள். சமூகநீதியை அடையாளமாகக் கொண்ட அகில இந்தியத் தலைவர்கள் வந்து சென்ற இடம் அது. பெரியார் வாழ்ந்த இடம் அது. தமிழ்நாட்டின் முதலமைச்சர்கள் அனைவரையும் வழிநடத்திய இடம் அது. அங்கேயே போலீஸைப் போட்டு, முடக்குவதன் மூலமாக விஜய் என்ன சொல்ல வருகிறார்?

**‘இனி யாராக இருந்தாலும் இந்தக் கதிதான், இப்படித்தான் நடவடிக்கை இருக்கும்’ என்று சொல்கிறார். ‘பெரியார் எல்லாம் எனக்கு சும்மா படம்தான்’ என்று சொல்கிறார். படங்காட்டிப் படங்காட்டி வளர்ந்தவர், கோட்டையிலும் படங்காட்டி காலத்தை ஓட்ட நினைக்கிறார்.**

**ஓடு ... ஓடு... ஓடு...!**

**இது நாட்டுக்கு கேடு... கேடு....கேடு...!**

## கடந்த 8 ஆண்டுகளில் பல்வேறு நூலகங்கள் – படிப்பகங்களுக்கு

# 6 லட்சம் புத்தகங்கள்: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 1 -**

**கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திருநெல்வேலி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அவர்களிடம் 3000 புத்தகங்களையும், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அவர்களிடம் 2000 புத்தகங்களையும் நேற்று (31.07.2026) வழங்கினார். இதுவரை 6 லட்சம் புத்தகங்கள் கடந்த 8 ஆண்டுகளாக வழங்கப்பட்டுள்ளது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**





கழகத் தலைவராக மு.க ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன், தன்னை சந்திக்க வருபவர்கள் சால்வை, பூங்கொத்து 2018 ஆம் ஆண்டு தவிர்த்து புத்தகத்தை வழங்க அறிவுறுத்தியதையடுத்து, கடந்த 8 ஆண்டுகளாக, தலைவர் அவர்களுக்கு வந்த புத்தகங்களை, தன்னிடம் கோரிக்கை வைக்கும் நூலகங்களுக்கு அனுப்பி வருகிறார்.

அதனைத் தொடர்ந்து கடந்த ஆறு மாதங்களில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நூலகங்கள், கழகத் தோழர்கள் நடத்தும் படிப்பகங்கள் மற்றும் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழகமெங்கும் உள்ள இளைஞர் அணி நூலகங் களுக்கு என இது வரை ஆறு லட்சம் புத்தகங்களை வழங்கியுள்ளார்.

நேற்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பாளையங்கோட்டை மத்திய சிறையில் உள்ள கைதிகள் புத்தகங்கள் படிக்கவும் அறிவு திறனை மேம்படுத்தும் வகையில் திருநெல்வேலி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் அவர்களிடம் 3000 புத்தகங்களும், பழைய தாம்பரம் குளக்கரைத் தெருவில் புதிதாக திறக்கப்பட்ட நூலகத்திற்கு தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா அவர்களிடம் 2000 புத்தகங்களையும் வழங்கினார்.

## அடக்குமுறை அரசியலைக் கைவிட்டு ஆசிரியர் கி. வீரமணியின் பரப்புரைப் பயணத்துக்கு அனுமதி வழங்கிட வேண்டும்!

# “NEET, EWS Quota எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசை விட த.வெ.க. அரசுதான் அதிகம் மிரளுகிறது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஆக. 1-

“NEET, EWS Quota எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசைவிடத் த.வெ.க. அரசுதான் அதிகம் மிரளுகிறது என்று கண்டனம் தெரிவித்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிடர் கழகம் நடத்தும் - ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பரப்புரைப் பயணத்துக்கு உரிய அனுமதியை த.வெ.க. அரசு வழங்கிட வேண்டும் என்று தனது சமூக வலைதளப் பதிவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் (30-07-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**“NEET, EWS Quota எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசைவிட த.வெ.க. அரசுதான் அதிகம் மிரளுகிறது!**

**தந்தை பெரியாரைக் கொள்கைத் தலைவர் எனச் சொந்தம் கொண்டாடும் த.வெ.க. அரசு பெரியார் திடலிலேயே போலிசாரைக் குவித்திருப்பது ஏன்?**

**திராவிடர் கழகத்தின் இருசக்கர வாகனப் பரப்புரைப் பயணத்துக்குக் கடைசி நிமிடத்தில் அனுமதி மறுத்ததற்கு என்ன காரணம்? யாரின் அழுத்தத்துக்குப் பணிந்து இதைச் செய்கிறார்கள்?**

**கடந்த காலங்களில் மிக அமைதியான முறையில், அறவழியில், கண்ணியத்தோடு இதே போராட்டங்களைத் தாய்க்கழகமாம் திராவிடர் கழகம் கட்டுப்பாட்டுடன் நடத்திக் காட்டியிருக்கிறது. அத்தகைய இயக்கத்தின் பரப்புரைப் பயணத்தைத் தடை செய்வது வன்மையான கண்டனத்துக்குரியது.**

**சிவப்பும் மஞ்சளும் சேர்ந்தால் கிடைப்பது காவி என்பது இதன் மூலம் உறுதியாகிவிட்டது.**

**அடக்குமுறை அரசியலைக் கைவிட்டு, @AsiriyarKV அவர்களின் பரப்புரைப் பயணத்துக்கு உரிய அனுமதியை த.வெ.க. அரசு வழங்கிட வேண்டும்!”**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# டெல்லியில் இ20 பெட்ரோலுக்கு எதிராகப் போராட்டம் நடத்த அனுமதி மறுப்பு!

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு நெருக்கடி!

*புதுடெல்லி, ஆக. 1 -*

*இ20 பெட்ரோல் விநியோகத்திற்கு தடை விதிக்கக் கோரும் போராட்டங்களால் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு நெருக்கடி அதிகரித்து வருகிறது. தலைநகர் டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.*

*20 சதவிகிதம் எத்தனால் கலந்த பெட்ரோலை பயன்படுத்துவதால் வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதுடன், மைலேஜும் குறைவதாக வாகன ஓட்டிகள் குற்றம் சாட்டுகின்றனர். இ20 பெட்ரோலுக்கு தடை விதிக்கக் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.*

*டெல்லியில் நீட் முறைகேடுகளுக்கு எதிராக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி போராட்டம் நடத்தி நாட்டின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்தது.*

*அதேபோல், எத்தனால் கலந்த பெட்ரோல் விற்பனைக்கு எதிராக E20 ஜனதா கட்சி தொடங்கப்பட்டது ஒன்றிய அரசுக்கு புதிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மற்றும் பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்திப்சிங் பூரி ஆகியோர் பதவி விலகக்கோரி போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில், தலைநகர் டெல்லியில் இ20 ஜனதா கட்சி போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, ஆகஸ்ட் 4 ஆம் தேதி டாக்சி ஓட்டுநர்கள் சங்கம் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.*